**OS No.131/2019**

PW 1 – வீராயி

நாள் 04.03.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

1990 சதுர அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையாளர் பூமியில் நிலத்தை அளக்கும் போது வருவாய் துறை ஆவணங்களிலும் பூமியிலும் 1241.46 சதுர அடி மட்டுமே உள்ளது என்றால் அளக்கவில்லை, நாங்கள் அன்று கோவிலுக்கு சென்றுவிட்டோம்.

நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் நீதிமன்ற ஆணையாளர் உங்கள் முன்னிலையில் நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து விபரத்தின் படியும், வருவாய் துறை ஆவணங்கள் படியும் உங்கள் வழக்கறிஞர் முன்னிலையிலும் பிரதிவாதி வழக்கறிஞர் முன்னிலையிலும் சர்வேயர், வீ.ஏ.ஓ, தலையாரி உள்ளிட்ட வருவாய் துறை அதிகாரிகள் முன்னிலையிலும் தாவா சொத்தை அளந்து காண்பித்தார்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் தான் பிரதிவாதிக்கு பாத்யப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளீர்கள் என்றும் உங்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள், வருவாய்துறை நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நன்கு பரிட்சையம் என்பதால் பிரதிவாதி மீது தவறான காரணங்களைக் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் கேட்டுள்ள பரிகாரமும் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை சட்ட காலத்திற்கு மேலாக வீடு கட்டி காலி இடமாக அனுபவம் செய்துவருவதை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தைப் பொறுத்து சர்வே எண் 215/14 ல் கெட்டி கட்டிட வீட்டிற்கு தெற்குப்பக்க கிழமேல் சுவருக்கு அடுத்து

தெற்கே மொத்த விஸ்தீரணம் கிழமேல் 30, தென்வடல் 4 ஆக மொத்தம் 120 அடியுல் பிரதிவாதி வீட்டின் தெற்குப்பக்க கிழமேல் சுவருக்கு அடித்து தெற்கு மேற்கு பக்க வாதியால் ஆக்கிரமித்துள்ள பகுதியான கிழமேல் 15, தென்வடல் 4 அடி அளவுள்ள 60 சதுரடி இடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நீங்கள் ஆக்கிரமித்துள்ள மேற்படி இடத்தை பிரதிவாதி வசம் இடித்து அப்புறப்படுத்தி நீங்கள் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**